Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 24 (09 - 11 - 1992) திங்கட்கிழமை ஓசை 265

## சிறிலங்கா வங்கிகளில் வைப்பிலிட வெளிநாட்டில் வசிப்போர் தயக்கம்

சிறிலங்காவில் அரச வங்கிகள் பல தொடர்ச்சியாக வங்குரோத்து நிலையை அடைந்து வருவதால் வெளிநாடுகளில் வசிக்கும் பலர் அவற்றில் பணத்தை வைப்பிலிடத் தயங்குகின்றனர் என பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது அடுத்த ஆண்டுக்கான சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டம்பற்றிய விமரிசனத்தின் போது மேற்கண்டவாறு தெரிவித்த பி. பி. ஸி. அது பற்றி விளக்குகையில் இந் நிலையிலிருந்து வங்கிகளை மீள முடியாது எனக் கருதி அரசு தற்போது வங்கிகளையும் தனியாரிடம் ஒப்படைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. அரசின் இந்நடவடிக்கை வங்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத் திட்டம் எதுவுமின்றி யாழ். செல்வதில் பயனில்லை

## மங்கள முனசிங்கா தெரிவிப்பு

[கொழும்பு]

தீர்வுத் திட்டம் எதுவும்மின்றி வட பகுதிக்கு செல்வது எது வித பயனையும் தரப்போவதில்லை என பாராளுமன்ற தெரிவுக்குழுத் தலைவர் திரு. மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார். கடந்த வாரம் வடபகுதியைச் சேர்ந்த முக்கிய அதிகாரி, ஒருவரை சந்தித்து உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரித்துள்ளார்

இதுதொடர்பாகஅவர்மேலும் கூறுகையில் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசோ அல்லது எதிர்க்கட்சிகளோ விரும்பியதாகத் தெரியவில்லை இனப்பிரச்சினைகளின் உண்மை நிலைமையை சகலரும் நன்கு தெரிந்து கொண்ட போதிலும் இது வரை அதனைத் தீர்ப்பதற்கான எந்த ஒரு நல்ல தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை மாறாக இனப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என வாயளவில் மட்டுமே கூறிவருகின்றனர்.

என்னைப் பலரும் எப்போ வடபகுதி செல்வீர்கள் எனக் கேட்கின்றனர் இங்குள்ளவர்கள். இது தொடர்பாக எந்த ஒரு தீர்க்கமான முடிவையும் எட்டாது குழம்பிய நிலையில் இருக்கும்போது நான் அங்கு சென்று விடுதலைப் புலிகளுடன் எதை ஆதாரமாகக் கொண்டு எவ்வாறு பேச்சு வார்த்தையை நடாத்துவது?

அரசும் எதிர்க்கட்சிகளும் இணைந்த ஓர் நல்ல முடிவை முன்வைக்காதவரை வடபகுதி விஜயம் சாத்தியமற்றது.

சிலர் தமது அரசியல் பிரசாரத்திற்காக வடபகுதி செல்லலாம் ஆனால் எனக்கு அவ்வாறான ஒரு பிரசாரம் தேவையற்றது. நான் முன் வைத்த நான்கு அம்சக்கோரிக்கைகளுக்கே அரசு இதுவரை மௌனம் சாதிக்கிறது இன் நிலையில் புலிகளுடன் பேச்சு வார்த்தை என்பது எவ்வாறு சாத்தியமாகும் என்றார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ கைதிகளின் விடுதலை தொடர்பாக சர்வமதக் குழுவினர் அங்கு செல்வதாயின் அரசின் முடிவுடனேயே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் புதிய யோசனை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்கவெனஅமைக்கப்பட்டபாராளுமன்ற தெரிவுக்குழு புதிய யோசனை ஒன்றை கட்சிகளுக்கு சமர்ப்பித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியே ஒவ்வொரு மாகாண சபைகள் அமைக்கப்படும் எனவும், இதற்கான கவர்னர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார் எனவும் அந்தயோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

## போரில் அரசாங்கம் தீவிரத்துடன் ஈடுபடவில்லை

- சி. வி. குணரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாயுடன் சேர்ந்து வேட்டையாடுவதும் முயலுடன் சேர்ந்து ...

படை தேவை என இராணுவ தளபதிகேட்டுள்ளார். ஆனால் அரசோ பணம் இல்லை என ...

## வட-கிழக்கில் கடமையாற்ற பொலிஸ் படைக்கு ...

## குவேக்கோர்ஸ் குழு யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

குவேக்கேர்ஸ் சமாதானத் தூதுக் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக் குழுவினர் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர் குவேக்கேஸ்பிரதிநிதிகள் கொழும்பில் பல அரசியல் கட்சித் தலைவர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து இனப் பிரச்சினை குறித்து அவர்களுடன் ஆலோசனை கலந்த பின் யாழ்ப்பாணம் வந்திருப்பதாகத் தெரியவருகிறது

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை எட்டும் நோக்கத்துடன் இக் குழுவினர் சிலர் முன்பு பலமுறை யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை மேற்கொடிருந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசுக்கு வழங்கிய கடனை வங்கிகள் மீளப்பெற முடியவில்லை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசிற்கு வழங்கிய பலகோடி ரூபா கடன்களை மீளப் பெறமுடியாத நிலையில் வங்கிகள் உள்ளதாக வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

கடந்த சில வருடங்களுக்கு முன் சிறிலங்கா அரச கூட்டுத் ஸ்தாபனங்கள், திணைக்களங்கள் மற்றும்அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற பாரிய நிறுவனங்களுக்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன ஆறாயிரம் கோடி ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளன.

தற்போது நட்டத்தில் இயங்குவதாக காரணம் காட்டி இக் கடனை இவை மீளச் செலுத்தாது காலம் கடத்தி வருகின்றன. இதனால் மேற்படி வங்கிகளின் மூலதனத்தில் கணிசமானதொகை அரசிடம் முடங்கியுள்ளது இம் மூலதன முடக்கத்தாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் வங்கிகள் பெரும்நிதி வருவாயைஇழந்துள்ளன இவ்வங்கிகள் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்று அவற்றை கடன்களாக வழங்கிஅதிலிருந்து பெறும் வருமானத்தில் ஒரு பகுதியையே வைப்பாளர்களின் வைப்புக்களுக்கு வட்டியாக செலுத்தி வருவது தெரிந்ததே.

பல வருடங்களாக வடக்குக் கிழக்கில் பொதுமக்களுக்கு வங்கிகள் வழங்கிவந்த பல கடன்களை அரசு இராணுவ நடவடிக்கைகளைக் காரணம் காட்டி நிறுத்தியுள்ளது இவற்றால் வங்கிகளில் பெருமளவு நிதி தேங்கியுள்ளது. இதனாலேயே வங்கிகள் பொதுமக்களின் வைப்புக்களை ஏற்பத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயுத தடையை நீக்க பிரிட்டன் முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு ஆயுதம் வழங்குவது தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் முடிவு செய்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவில் பிரிட்டிஷ் தூதுவராக கடமையாற்றிய டேவிட் கிளாஸ்ரன் கொழும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிறிலங்கா அமைச்சரவையில் ...

ஓடுவதுமே போர் விவகாரத்தில் அரசாங்கத்தின் போக்காக உள்ளது. இப்போரில் அரசாங்கம் ஒருமுகப்பட்ட தீவிரத்துடன் செயற்படவில்லை என கொழும்பு மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. சி. வி. குணரத்ன கடந்த வியாழன் பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இப்போது இராணுவத்தில் ஆட்கள் சேர்வது இல்லை ஒரு இலட்சம் பேர் கொண்ட அரசோ பணம் இல்லை என கைவிரிக்கிறது இப்போது படைக்கு ஆள்திரட்டல் இடம் பெறுவதும் இல்லை எனத் தெரிவித்தார்.

## 5000 பேரை திரட்ட முடிவு

வட - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்ற மேலும் 5000 பேரை பொலிஸ் படையில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ் ஆட்சேர்ப்புக்கான அனுமதியினை சிறிலங்கா பாதுகாப்புஅமைச்சு பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கிறன.

இதனையடுத்து பொலிஸ் திணைக்கள ஆட்சேர்ப்பு பணியகம் விரைவில் விண்ணப்பங்களை கோர உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## யுத்தத்தைவிரைவில் முடிக்க முடியாத காரியமாம்

இன்றைய யுத்தத்தை மின்வெட்டு வேகத்தில் நடத்த முடியாது. பலம் பொருந்திய இந்திய இராணுவம் 14 மாத காலம் இங்கிருநது ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய வீரர்கள் அப்போது கொல்லப்பட்டனர் பலர் காயமும் அடைந்தனர். இந்தப் பலம் வாய்ந்த படைகளால் கூட விடுதலைப்புலிகளை அடக்க முடியாது போய் விட்டது எனவே தான் ஜனாதிபதி பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்துள்ளார்.

இவ்வாறு படையினர் சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் யுத்தத்தை இரு மாதத்துக்குள் முடிப்போம் என்பது மக்களுக்கு நம்பிக்கையூட்டும் கூற்றாக அமையலாம் ஆனால் குறிப்பிட்ட திகதியில் யுத்தத்தை முடிக்க முடியாது ஏனெனில் இது கெரில்லா யுத்த முறையை கொண்டது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிச.இறுதிக்குள்பாரியமாற்றம்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள்அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் ஏற்படலாம் என ராவய பத்திரிகையின் ஆசிரியர் பி பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இம்மாற்றத்தின் போது நிதி அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவிகளைத் தற்பொழுது வகித்து வரும் டி. பி விஜயதுங்காவின் அமைச்சுக்கள் வேறு சிலருக்குப் பகிர்ந்தளிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல் பிரதம மந்திரியாகவும் நிதி அமைச்சராகவும், நியமிக்கப்படலாம் எனவும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பு திரும்பவிருக்கும் டி மெல் ஐக்கிய தேசியக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தலைமையை மாற்றுவதால் செயற்பட முடியவில்லை

**-சு. க. எம், பி. குற்றச்சாட்டு**

கூட்டுப்படை தலைமையக அதிகாரம் அகற்றப்பட்டு முப்படை தளபதிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. பின்னர் மீண்டும் கூட்டுப்படை தலைமையகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்படியாக நிலைப்பாடுகள் மாறும்போது படையினர் எப்படி ஒரு திட்டத்தின் அடிப்படையில் செயல்பட முடியும் சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம் பி. நிமல் சிறிபாலடி சில்வா அண்மையில் பாராளுமன்றத்தில் முப்படை சம்மந்தப்பட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பான கூட்டத்தில் கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் பாதுகாப்பு படை உயர் மட்டத்தில் இழுபறி நிலை இருக்கும்போது படைகளில் சேர புதியவர்கள் முன்வர அஞ்சுகின்றார்கள். இத்தகைய நிலை குறித்து நாம் படையினரை குறை கூறவில்லை அரசையே குறை கூறுகின்றோம் என்றார்.

## இவ்வருட இறுதிக்குள் முடிவடையும் யுத்தத்திற்கு ஏன் 18,000 கோடி ரூபாய்?

அரச ஊழியருக்கு முப்பது விகித சம்பள உயர்வு என்று பிரதமரும் நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா அறிவித்த சமயம் 'எங்கே இருந்து இவர் இந்தப் பணத்தை எடுக்கப் போகிறார்?'' என்று பார்வையாளர் கூடத்தில் இருந்தவர்கள் மெதுவாகக் கேட்டார்கள் என்று பி. பி, ஸி செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது,

18,000 மில்லியன் ரூபா மட்டுமே 1993 க்கு பாதுகாப்புச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆச்சரியமான விடயம், வரும் நத்தார் தினத்துக்கு முன் போர் ஓய்ந்துவிடும் என்று பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார் அப்படி நடக்குமென்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தியை ஒத்திவையுங்கள் யுத்தத்தை தீவிரமாக நடாத்துங்கள்

**ஐ. தே. க எம். பி கோரிக்கை**

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைத்துவிட்டு யுத்தத்தைத் தீவிரமாக நடாத்தி இன்றைய பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணுங்கள் என ஐ தேகவின் அம்பாந்தோட்டை எம்.பியான டாக்டர் வி எம் பி. சிறில் கடந்த வியாழன் அன்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை அழிக்க அனைவரும் யுத்தத்தில் குதிக்கவேண்டும் எனவும் தொண்டமான், செல்லச்சாமி, முஹம்மது, பண்டாரநாயக்கா, அஷ்வர், அஷ்ரப் ஆகிய அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இராணுவத் தீர்வைக்காணுமாறு வலியுறுத்தும் இவ் எம். பி பேச்சுவார்த்தை நடாத்துவதில் அர்த்தமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## வட-கிழக்கிற்கு சுயநிர்ணய உரிமை பிரச்சினையை தீர்க்க வழிஇதுவே

**- வாசுதேவ நாணயக்கார**

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குவதன் மூலமே இன்று தொடர்ந்து கொண்டிருக்கும் போரை முடிவிற்கு கொண்டுவர முடியும் என நவ சமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார கடந்து வியாழனன்று பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துத்தான் ஆக வேண்டும் அதைப் போரின் மூலமாக ஒருபோதுமே செய்யமுடியாது. வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குவதன் மூலமே பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியும் போருக்கும் முடிவுகட்ட முடியும் எனத் தெரிவித்துடன் எமது கட்சியைப் பொறுத்தவரைக்கும்போருக்குஇப்போதுசெலவிடப்படும் பெருந்தொகைப் பணத்தை வீணானது என்பதால் அதனை கடுமையாக எதிர்க்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## கிழக்கில் புலிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை ஆரம்பம்

### முஸ்லிம்களை திருப்திப்படுத்தும் முயற்சியாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்று அதிகாலை 5-00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை, இதுவரையில் கிழக்கில் புலிகளுக்கு எதிராக இராணுவம் எடுத்த நடவடிக்கைகளில பெரியதென சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன,

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு, வீதித்தடைகளும் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

இந்நடவடிக்கையில் நான்கு இராணுவ கொமாண்டோ அணிகளும், பல விசேட அதிரடிப் படைப்பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நுண்கலைஞர்கள் தேவை

பிரபல தனியார் வைத்திய ஸ்தாபனமொன்றிற்கு உடனடியாக அனுபவம் மிக்க வைத்திய ஆய்வுகூட நுண்கலைஞர்கள் (MLT) தேவை. நேரடியாகச் சான்றிதழ்களுடன் 17, கண்டி வீதி சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்திலுள்ள வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை நிறுவனத்தடன் தொடர்பு கொள்ளவும் —நிர்வாகம் (3607)

### அனுமதிப் பரீட்சை ஆண்டு 6

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதிப் பரீட்சை 10-11-92 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3608)

### தவறிவிட்டது

07-11-92 அன்றுஇரவு நவாலியில் இருந்து புத்தூருக்கு வரும் வழியில் மோட்டார் சயிக்கிள் பதிவுப் புத்தகம், 'ரைக்ஸ்', காப்புறுதிப் படிவம் இன்னும் சில பொருட்களும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3609)

### புதிய மீரா நாவல்

1992இல் வெளிவந்தவை. சுவடுகள், மீண்டும் புதிதாய்ப் பிறப்போம். விண்ணில் அல்ல விடிவெள்ளி. ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள், மீரா பிரசுரங்கள்'' கையிலிருந்தால் பெருமை,படித்துப்பார்த்தால் அருமை. (3584)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோசகளை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி-5152)

### பற் சிகிச்சை நிலையம்

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லா

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு II) துரித மீட்டலுக்கான வினா விடை ஆ.ச.ம்: க சந்திரசேகரம். வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5356)

### நடிக்கிறீர்களா?

'எனது கெட்டிக்காரர்கள்' முதலாம் பிள்ளை, 30/- நூல்களிலுள்ள 19 நாடகங்களையும் நடிக்கிறீர்களா? என்னையும் கலந்தாலோசியுங்கள். நடிக்கும் முறை சொல்லித் தருவேன். அராலியூர் சுந்தரம்பிள்ளை 30, கடைச்சாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (3212)

### எம் ஜி. ஆர் திருமணசேவை

பொருத்தமான மணமகன், மணமகள் தேடுபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் எம் ஜி ஆர் திருமண சேவை வே. புண்ணியமூர்த்திமீசாலை' முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது (3356)

### உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண்சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட கழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

### விற்பனைக்கு

Prima + Bahira Hy—Line Christombu. பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தம்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் + புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்குஒழுங்கை மானிப்பாய் [3221]

### திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மங்களா ஏஜென்சி ஜெயாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை, (3586)

### விபத்தில் பலி

குருநாகலில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் கொக்குவில் வாசியொருவர் பலியானார் பூநாறி மரத்தடியைச் சேர்ந்த செ. கனகலிங்

# சண்டை இல்லா நாடு இல்லை உங்கள் நாட்டுக்கு செல்லுங்கள்

## தமிழ்நாடு அகதிகள் அலுவலர் தெரிவிப்பு

''எந்த நாட்டில் இப்போது சண்டை நடக்கவில்லை அமெரிக்காவில் அடிக்கடி உள்நாட்டுக்கலவரம் நடக்கிறது, ரஷ்யா என்ற நாடே இப்போது இல்லை. இந்தியாவில் இல்லாத சண்டையா? காஷ்மீரில் கலவரம் தொடர்கதையாக நடைபெறுகிறது. பஞ்சாப்பில் படுகொலைகள் தினம்தோறும் நடைபெறுகின்றது எங்கள் நாட்டில் ஏராளமான பிரச்சினைகள் இருந்தும் அவற்றை சமாளித்துக் கொண்டு உங்களுக்கு உதவி செய்துள்ளோம் அதைப்பயன்படுத்தி இங்கேயே இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கக் கூடாது உங்கள் நாட்டுக்கு நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும் ''

இவ்வாறு தமிழக அகதிகள் நல்வாழ்வு அலுவலர் ராம்தாஸ் நாட்டரசன் கோட்டை, கொல்லங்குடி ஆகிய இடங்களில் உள்ள அதி முகாம்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுடன் உரையாடும் போது தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் எல்லோரும் ஒரு நாள் சாகவேண்டியவர்கள் தான் அதற்காக பயந்து கொண்டு எத்தனை நாள் வாழ்வது இதுபற்றி யோசித்து உங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்வது குறித்து சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

ராம்தாஸின் இவ் உரையாடலினால் அதிர்ந்த அகதிகள் சிறிது நேர மௌனத்தின் பின் எமக்கு திரும்பிச் செல்ல பயமாக இருக்கிறது. எமது உயிருக்கு ஆபத்து; எப்போதும் என்ன வேண்டுமானாலும் நிகழலாம் சண்டை முடிந்தவுடன் நாம் திரும்பிச் செல்வது குறித்து யோசிக்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

இவ் அகதிகளுடன் உரையாடியதன் பின்னர் நிருபர்களிடம் ராம்தாஸ் உரையாடும் போது அகதிகளின் விருப்பத்தைப் புறக்கணிக்காமலும் அதேநேரம் அவர்களை முழுமையாக அங்கீகரிக்காமலும் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் டிசம்பர் மாத இறுதிக்குள் இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்கு 2 500 அகதிகள் தயார் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

# சகல பிரச்சினைகளுக்கும் ஆட்சிமுறையே காரணம்

-ரிச்சாட் பத்திரன

(மாத்தறை)

இனங்களுக்கிடையே உறவு மோசமடைந்து தேசிய பிரச்சினை உச்சக்கட்டத்தைஅடைந்துள்ளது. மனித உரிமைகள், சுதந்திரம் என்பன அறவே ஒழிக்கப்பட்டு மனிதப்படுகொலைகள் நாளாந்தம்நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரும், பாராளுமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான ரிச்சர்ட் பத்திரண மாத்தறையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இன்று ஏற்பட்டிருக்கும்அனைத்துப் பிரச்சினைகளுக்கும் 1978 முதல் ஆரம்பிக்கப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையே காரணமாகும். இம்முறை மூலம் எம். பிக்கள் முதல் அமைச்சர்கள் வரை அனைவருமே தரம் குறைக்கப்பட்டுள்ளனர் இந்த ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டாலே உருப்படியான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தென்னை மரத்திற்கு உரமிட ஏற்ற காலம்

உரமிடுவதன் மூலம் தரையின் ஊட்டச்சத்தை அதிகரிக்கலாம். தமிழீழப் பிரதேசத்தில் மாரிகாலம் உரமிடுவதற்கு ஏற்ற காலமாகும் எனவே தெங்குச் செய்கையாளர்களும், வீட்டுத்தோட்டங்களில் தென்னை பயிரிட்டுள்ளவர்களும் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக்கழகம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், ஐந்து வருடத்திற்கு உட்பட்ட இளம் தென்னம் கன்று ஒன்றுக்கு 2 கிலோ (Y. P. M) வை. பி. எம் (இளம் மரக்கலவை) உரமும். ஐந்து வருடத்திற்குமேற்பட்ட காய்க்கும் தென்னை கலவை) உரமும் இடுதல் அவசியம்.

தென்னை ஒவ்வொரு மாதமும் பூத்துக்காய்த்துப் பயன் தரும். வருடம்பூராவும் பலவித பயன்களைத் தருவதால் தரையில் உள்ள ஊட்டச்சத்து வெகு விரைவில் இழக்கப்படுகின்றது இந்த இழப்பை ஈடுசெய்வதன் மூலம் தொடர்ச்சியாக நல்ல பயனைப்பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது


உரமிடுதல் பீடைகள் பற்றிய தொழில் நுட்ப ஆலோசனைக்கு தென்னை பயிர்ச்செய்கை சபை. யாழ் மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெசத்தியேந்திரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 24 — 08 — 1978



வீரச் சாவு 09 — 11 — 1990

### லெப்டினன்ட் நவாஸ்

(இராசரத்தினம் சுதானந்தன்)

தமிழீழம் தமிழர் தாயகமாக்கி வைக்க
எழிற் போரில் புலியாய் இலக்கிற் போர் தொடுத்தாய்
சளக்கர் சகடை சாவகச்சேரியில் தள்ளிய குண்டால்-
உன் இரத்தம்
அளவிலா உரமாக அவனியில் தமிழீழம் மலர நாம்
மகிழ்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்

(3602)

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-09

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மானிப்பாய்ப் பகுதியில், இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

நகுலன் (செல்லத்துரை சூரியப்பிரகாசம் - புலோப்பளை மேற்கு, பளை)

கட்டப்பராய்ப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

பஞ்சன் (செல்வநாயகம் பஞ்சரத்தினம் - சிவகுலவீதி, உரும்பராய் தெற்கு, யாழ்)

நல்லூர், மானிப்பாய் பகுதிகளில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கணவன், மனைவிஉட்பட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் இதே தினத்திலிருந்து 2 நாட்கள் இந்தியப்படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களில் கொலை செய்யப்பட்ட தந்தை. மகள் மற்றும் இளம்பெண்கள், இளைஞர்கள் உட்பட 9 தமிழர்கள்.

இணுவில் பகுதியில். தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அளவெட்டி டச்சு வீதியைச் சேர்ந்த மேற்பார்வையாளரும் நாடகக் கலைஞருமான தமிழ்ப் பொதுமகன்.

பற் சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில் தினசரி; 4 பி. ப. — 6 பி. ப ஞாயிறு; 10 மு. ப. — 2 பி. ப.

(3216)

## தவறிவிட்டது

நன்னித்தம்பி சண்முகசுந்தரம் ஆகிய எனது இல. 54004 2829 × தேசிய, வ.பி. போ. சபை அடையாளஅட்டைகள், கொழும்பு செல்வதற்கான பாஸ் ஆகியன கிளாலியில் இருந்து வரும் போது தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலோ அல்லது வ. பி. போ. சபை கோண்டாவிலில் நேரடியாகவோ கையளித்தால் தகுந்த சன்மானம் தரப்படும்.

(3611)

## மரம் நடுகையும் சிரமதானமும்

கடந்த 02-11-1992 அன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட டுக் கழகத்தினரால் சிரமதானமும், மரக்கன்றுகளின் நடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

மாவீரர் துயிலும் இல்ல வேலிஓரங்களில் வேம்பு மரக்கன்றுகளும் இராஜ வீதியின் இருபுறமும் சவுக்கு மரக்கன்றுகளும் இவ்வைபவத்தின்போது நாட டப்பட்டன.

## இன்று திறந்திருக்கும்

பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதற்காக யாழ்ப்பாணம் ப நோ. கூ. சங்கக் கிளைகள் இன்று போயாதினத்தன்று திறந்திருக்கும். இத்தகவலை யாழ். ப நோ. கூ. சங்கத் தலைவர் சூ. சிறில் தெரிவித்தார்.

பலியானவார் பூநாறி மரத்தடியைச் சேர்ந்த செ. கனகலிங்கம் (வயது 47) என்பவரே இவ் விபத்தில் பலியானவராவர்.

## உதைபந்தாட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலைய சமாசம் நடாத்தும் 19 வயதுக்குட்பட்டவர்களின் உதைபந்தாட்டப் போட்டி நேற்று பிற்பகல் 4 மணிக்கு நாவாந்துறை கலைவாணி சனசமூகநிலைய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மேற்படி சமாசத்தால் நடாத்தப்படும் வலைபந்தாட்டப்போட்டி மீண்டும் 11-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நாவாந்துறை சென்மேரி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (24)

மும். ஐந்து வருடத்திற்குமேற்பட்ட காய்க்கும் தென்னை மரங்களுக்கு 2 1/2 கிலோ(A. P M) ஏ. பீ. எம் (முதிர்மரக்

## நாலாம்கட்ட நிவாரணம்

காரைநகர் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்காக காரைநகர் ப நோ. கூ. சங்கத்தால் வழங்கப்படும் நிவாரண உதவியில் ஐப்பசி மாதத்திற்குரிய நான்காம் கட்ட நிவாரணம் நாளை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை இச் சங்கத்தால் வழங்கப்படவுள்ளது. எனவே இடம் பெயர்ந்த மக்கள் குறித்த கிளைகளில் தத்தமக்குரிய நிவாரணத்தை பெற்றுக் கொள்ளுமாறு சங்கத்தின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செஞ்சிலுவை மருத்துவ வசதி அளிக்கும்

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து திரும்பும் அகதிகளைத் தங்க வைப்பதற்கென வவுனியா ஆசிகுளம் பகுதியில் அமைக்கப்படும் முகாமிற்கு மருத்துவ வசதி அளிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன் வந்துள்ளது. இதற்காகவும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு பகுதியில் வாழும் மக்களின் நலன்களையும் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகளையும் கண்டறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வவுனியாப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

## அகதிகளுக்கான பணத்திலும் மோசடி நடக்கின்றது

— எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

அகதிகளுக்கென உதவப்படும் பணத்திலும் மோசடி நடக்கிறது என்று ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கூறினார்.

நீதிஅமைச்சின் குறைநிரப்பு பிரேரணை தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் இடம் பெற்றபோது அதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி மேலும் கூறுகையில்;

முன்னர் ஒரு காலத்தில் நீதிமன்றங்களுக்கு செல்ல மக்கள் தயங்கினர். ஆனால் இன்றோ அடிக்கடி நீதிமன்றம் செல்கின்றார்கள். எனினும் மொழி பெயர்ப்பாளர்கள், தட்டெழுத்தாளர்கள் இல்லாமையால் வழக்குகள் பெருமளவில் தாமதமாகின்றன என்றும் குறிப்பிட்டார்.



## வீரவேங்கை பஞ்சன்

(செல்வநாயகம் பஞ்சரத்தினம்)

| தமிழுக்காக தரணியில் வந்தது | தமிழுக்காக தன்னுயிர் ஈந்தது |
|---|---|
| 10-05-1968 | 09-11-1987 |

ஆண்டுகள் ஐந்து மறைந்ததடா - ஆனாலும்
உன் அன்புமுகம் மறையவில்லையடா
அன்னியன் வந்து எமை ஆண்டிடலாமோவென
ஆர்ப்பரித்து நின்ற வீரப்புலியே பஞ்சரத்தினமே

அன்பின் திருவுருவாய் ஆசைக்குரிய மகனாய்
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
விடுதலையை நேசித்த வீரமகனே
உன் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாதடா.

என்றும் உன் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை வேண்டும்

''சந்திரிகை''
உரும்பராய் தெற்கு
9-11-1992

குடும்பத்தினர்
அன்பு நண்பர்கள்
(3599)

பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

★ நிஸ்வின் (அக்கரைப்பற்று)

★ ராஜா (மலையகம் கண்டி)

1990 ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய

பழனி (கனகரட்ணம் சேதீஸ்வரன் - 16 - டி. யோகபுரம், மல்லாவி, துணுக்காய்)

சாவகச்சேரிப் பகுதியில் எமது முகாம்மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

ஜஸ்ரின் (தியாகராசா சிறிஸ்கந்தராசா - 785, துணுக்காய், மல்லாவி)

2ஆம்லெப். குட்மன் (தாமோதரம்பிள்ளை பிரபாகரன் - தாவளை, இயற்றாளை, வரணி, கொடிகாமம்)

லோலோ (உடையார் மகாராசா-முதலியார் வீதி, அளவெட்டி வடக்கு, யாழ்)

அலெக்ஸ் (கிட்டினர் சுகந்தன் - மாசேரி, வரணி, கொடிகாமம்)

ரவாஸ் (இராசரத்தினம் சதானந்தன் - கைதடி, மேற்கு, யாழ்.)

வல்லவன் (சுப்பிரமணியம் அனுஷாந்தன் - இணுவில் மேற்கு, யாழ்.)

கொக்குவில் கிழக்கு, குளக்கரை வீதிக்குடியிருப்பு-சாவகச்சேரி தபால் நிலையவீதி, ஆகிய பகுதிகளில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-9377]

**சிந்தனைக்கு**

அடிமைத்தனத்தை அறுக்கும் ஆற்றல், அடிமை ஒவ்வொருவன் சொந்தக் கையிலே உள்ளது.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 09-11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## தமிழக அதிகாரியின் தத்துவ போதனை

"நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கை நடக்கின்றது. எல்லோரும் ஒருநாள் சாக வேண்டியவர்கள்தான். அதற்காகப்பயந்துகொண்டு எத்தனைநாள் மறைந்து வாழ்வது? இதைப்பற்றி நீங்கள் யோசிக்கவேண்டும்" இவ்வாறு தமிழக அகதிகள் நலவாழ்வுத்துறை அலுவலர் ராம்தாஸ் இலங்கை அகதிகளிடம் தெரிவித்தார். மேலும், அவர் 'எந்த நாட்டில் இப்போது சண்டை நடக்கவில்லை. அமெரிக்காவில் அடிக்கடி உள்நாட்டுக் கலகம் நடக்கின்றது' சோவியத்யூனியன் என்ற நாடே இப்போது இல்லை. இந்தியாவில் இல்லாத சண்டையா?, எனவும் வினவினர்.

திரு. ராம்தாஸ் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதில் இருந்தே இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழ் நாட்டில் இருந்து எவ்வளவு விரைவில் வெளியேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் வெளியேற்றி விட வேண்டும் என்று செயற்பட்டு வருபவர். இதற்காக இவர் கடைப்பிடித்த வழி முறைகள் சில மிகவும் கீழ்த்தரமானவையாகவும், ஏமாற்று மிக்கதாகவும் இருந்தது இவரின் நடவடிக்கைகள் குறித்துப் பலமான விமர்சனங்களும்எழுந்திருந்தன. ஆனால். திரு. ராம்தாஸ் தனது நிலைப்பாட்டை மாற்றியதாக இல்லை.

ஆனால், இதற்கான முழுப் பழியையும் ராம்தாஸின் தலையில் போடுதல் ஏற்புடையதல்ல. ஏனெனில் தமிழக அரசின் அதிகாரியான இவர் ஜெயலலிதா அரசாங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். அதாவது அரசிற்கு பூரண விசுவாசமாக இருந்து 'தமது கடமையைச்' செய்து வருகின்றார் என்றே கூறலாம். ஆகையினால் இன்று கூட ராம்தாஸின் அறிவிப்புக்களும், அறிக்கைகளும் இலங்கை தமிழ் மக்களை தமிழகத்தில் இருந்து விரட்டி விட்டால் போதும் என்ற அடிப்படை நோக்கம் கொண்டது என்பதில் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை.

ஆனால், திரு ராம்தாஸ் குறிப்பிட்டுள்ள வாழ்க்கைபற்றியதத்துவம் அவரின்நடவடிக்கைகள் போல்

# அயோத்தியாவில் இராமர் ஆலயமும்; இந்தியாவின் அரசியல் கட்சிகளும்

அயோத்தியாவில் இராமபிரானுக்கு ஆலயம் அமைப்பதற்கான கார்சேவா (கர சேவை) பணிகள் மீண்டும் தொடங்கப்பட இருப்பதாக விஷ்வ இந்து பரீஷத் அறிவித்துள்ளது டிசம்பர் ஆறாம் திகதி மீண்டும் ஆலயக் கட்டுமாணப்பணி ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பு இந்தியா முழுவதிலும் முன்னரைப் போன்ற பெரும் பரபரப்புக்களையும் பதற்றத்தையும் ஏற்படுத்தாத போதும் நரசிம்மராவ் அரசு இப்பிரச்சினையை எப்படிக் கையாளப்போகின்றது என்று அறிவதில் ஆர்வம் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இராமபிரானை அவரது விதிப்படியே நடக்க விட்டுவிட்டு நாட்டின் அபிவிருத்தி வேலைகளில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்பதுவே பிரதமர் நரசிம்மராவின் நிலைப்பாடாக இருந்த போதும் பிரதமர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அயோத்திப் பிரச்சினைக்கான பிரிவு சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

### இராமர் ஆலய ஆரம்ப வேலை

ஜெய் ஸ்ரீராம் என்று முழங்கியபடி ஆர் எஸ். எஸ் பாரதீய ஜனதா மற்றும் விஷ்வ இந்து பரிஷத், பஜ்தங் தள் என்பன போன்ற அமைப்புக்களைச் சேர்ந்த தொண்டர்கள்அயோத்தியின் ஒரு பகுதியை கடந்த ஜூலையில் முற்றுகையிட்டு பதினெட்டு நாள் கரசேவையில் இறங்கி 116X138X6 அடி அளவு கொண்ட அத்திபார மேடையொன்றைபாபர் மசூதிக்கு கிழக்கே கட்டி முடித்தனர் 270 அடி நீளமும் 96 அடி அகலமும 132 அடி உயரமும் கொண்டதாக இராமபிரான் ஆலயம் ரூபா ஐம்பது கோடி செலவில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இராமர் ஆலயம் கட்டுவதற்காக பாபர் மசூதியை இடித்தே ஆகவேண்டும் என்று கூறும் கோவில் ஸ்தபதியான சி.பி. சோம்புரா திட்டப்படி தொடர்ந்து நடத்தினால் கோவிலை குறிப்பாக அதன் கர்ப்பக்கிருகத்தை மசூதி இருக்கும் இடத்தில் கட்ட வேண்டி வரும் ஆனால் ராம்லாலா சிலை வாணமாகிப் போனது.

கர சேவைப்பணி தொடர்ந்தால் உத்தரப்பிரதேச அரசு தூக்கிஎறியப்படும்என்றநிலை ஏற்பட்ட போது பாரதீய ஜனதா பின்வாங்கியது. மாநில அரசைப் பலி கொடுத்தால் அரசியல் சேதாரம் ஏற்படும் என்று கணக்கிட்டுக் கொண்ட பாரதீய ஜனதாவின் தலைமை இந்தஒரு ஆண்டுக்குள் எட்டப்பட்ட சாதனைகளைச் சுட்டிக் காட்டியது. சர்ச்சைக்குரிய பகுதியில் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை, நிலம் கையகப் படுத்தப்பட்டமை, பலகட்டடங்கள் இடித்து அத்திபாரம் போடப்பட்டமை என்று சாதனைப் பட்டியலை நீட்டி முழக்கி ஆட்சி அதிகாரம் இழக்கப்படக்கூடாது என்று இடித்துக் கூறப்பட்ட போது கல்யாண் சிங்கும் விஷ்வ இந்து பரிஷத்தும் அசைந்து கொடுத்தது. இதையடுத்து நான்கு சாதுக்கள் புதுடில்லிக்கு விரைந்து பிரதமருடன் நன்கு விளம்பரப் படுத்தப்பட்ட சந்திப்புஒன்றை நடத்தினார்கள். பாபர் மசூதி கமிட்டியும் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்த ஒரு சமரச ஏற்பாடு உருவாகியது.

வெவ்வேறுநீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் அனைத்தையும், ஒருங்கு திரட்டுவதும், ஆவணங்கள் பரிமாறிக் கொள்ளப்படுவதும், இணக்கமான தீர்வொன்றைக் காண முயற்சிப்பதும், பிரதமர் அலுவலகத்தில் விசேட பிரிவு ஏற்படுத்துவதும் இந்தச் சந்திப்புக்களின்போது எட்டப்பட்ட முடிவுகளாயிற்று இங்கு பெரும் இக்கட்டான நிலைதவிர்க்கபட்டு தற்காலிக அமைதிபெறநரசிம்மராவ் அரசுக்கு அயோத்தியா பிரச்சினைக்கு தீர்வுகாணமூன்றுமாதகால அவகாசமும் வழங்கப்பட இணக்கம் காணப்பட்டது புதுடில்லி சென்ற சாதுக்கள் அமைதி மந்திரத்தை ஜெபித்தவர்களாக லட்சுமணருக்கு கோயில் கட்டுவோம் என்று கொல்லைப்புற வழியாகத் தப்பிக்கும் அவசர முடிவுடன் அயோத்தி திரும்பினர்.

### இராமர் ஆலயமும் பாரதீய ஜனதா தலைமையும்

அசிங்கமான அரசியல் ஆதா... கட்டுமாணப் பணிகளை எந்த சக்தியாலும் நிறுத்த முடியாது'' என்று முழக்கினார்.

தற்போது பாரதீய ஜனதா கட்சிக்குள் எல். கே. அத்வானி இப்போது சிறுபான்மையாகிவிட்டார் அடல்பிஹாரி வாஜ்பாய் ஒதுங்கிக்கொண்டு அசிரத்தையாக இருக்கின்றார் ஜோஷி அவருடைய பாதுகாப்பின்மையிலேயே சிக்கி இருக்கின்றார். பழையதலைமையும், ஆர். எஸ். எஸ் பிரசாரகர்களுமான கே. ஜி மத்தூர், கே. எல் சர்மா, எஸ். எஸ். பண்டாரி, ஏ. ராஜகோபால், பல்தேவ் பிரகாஷ் ஆகியோர் ராஜ்யசபை உறுப்பினர் பதவிச் சுகத்தில் மூழ்கிப்போய் உள்ளனர். பிரமோத் மஹாஜன், கோவிந்தாச்சார்யா, அருண் ஜேட்சி, நரேந்திர மோடி ஜோஷியால் பின்னுக்கு தள்ளப்பட்டு எரிச்சலுடன் இருக்கின்றனர்.

இந்த நிலையில்தான் நீதிமன்றத்தின் ஆணைக்கு கட்டுப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதாவின் மிதவாதிகள் குரலெழுப்புகின்றனர். கட்டுப்பாடுள்ள குடும்பத்தில் விரிசல் ஏற்பட்டிருப்பது வெளித்தெரியவே கூடாது என்ற தவிப்பில் விஷ்வ இந்து பரிஷித் ''ஒருதொந்தரவு தரும் குழந்தை'' என்பது போல காட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### நரசிம்மராவின் தர்மசங்கடம்

ஜூலையில் சார்சேவா இடம்பெற்றபோது முதல் நாளும் ராவ் மௌனம் காத்தது வெகு கெட்டிக்காரத்தனம் என்றே கருதப்பட்டது. ஆனால் வி. பி. சிங்கைப் போல ஆகிவிடக் கூடாது என்ற கவலையில் அவர் கடும் சஞ்சலத்திற்கு உள்ளாகியிருந்ததாகவே இப்போது தெரியவருகின்றது

உத்தரப் பிரதேச அரசு கலைக்கப்பட்டுவிட்டால் பாரதீய ஜனதா தியாகிப்பட்டம் பெற்றுவிடும். வகுப்புவாதத்தை தூண்ட அதற்கு வாய்ப்பு கிடைத்துவிடும் இதன் மூலம் குஜராத்திலும், கர்நாடகத்திலும, காங்கிரஸ் அரசுகளுக்கு ஆபத்து நேரிடலாம். அதே வேளை உத்தரப் பிரதேச அரசை விட்டுவைத்தால் கேரளத்தில் இ. காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு ஆபத்து நேரிடலாம் இதேவேளை இந்திரா காங்கிரஸில் இருக்கும் அர்ஜூன்சிங் முகாமைச் சேர்ந்தவர்கள் எப்போதுமே பாரதீய ஜனதாவும், நரசிம்மராவும் கூட்டுதான் என்று கூறுவதோடு நரசிம்மராவின் மௌனத்திற்கு இதையே காரணமாக்கி வருகின்றார்கள்.

### கருத்துக் கணிப்பீடு

அயோத்திப் பிரச்சினை தொடர்பாக மார்க் நிறுவனத்தின் அனுசரணையோடு இந்தியா டுடே கணிப்பீடு ஒன்றை நடாத்தியுள்ளது. 465 மக்களவைத் தொகுதிகளை உள்ளடக்கிய பதினொரு மாநிலங்கள் மற்றும் டில்லியிலுள்ள 30 தொகுதிகளில் இக்கருத்துக் கணிப்பீடு நடாத்தப்பட்டுள்ளது ஜூலை 23-25திகதிகளில் நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப்பீட்டில் 5650 வாக்காளர்களிடம் (527 பேர் முஸ்லிம்கள்) கருத்து பெறப்பட்டுள்ளது.

இந்தியாவின் மார்க் நிறுவனம் கருத்துக் கணிப்பீடுகள் நடாத்துவதில் பிரபல்யம் பெற்றவர்கள் என்பது, இவர்களின் தேர்தல் கணிப்பீடுகள் மிகத்துல்லியமாக இடம் பெற்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

நீதிமன்ற உத்தரவை மீறி இராமர் ஆலயம் கட்டப்பட வேண்டும் கரசேவையில் ஈடுபடுவோர் பெரும்பாலும் விரும்பியபோதும் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் மசூதியை இடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் ஐம்பத்து மூன்று சதவீதமானோர் மசூதியும், இராமர் ஆலயமும் இருக்க வேண்டும் என்றே விருப்பம் தெரிவித்து உள்ளனர். இருபத்துமூன்று சதவீதமானோர் இராமர் ஆலயத்திற்காக மசூதியை இடம் மாற்ற வேண்டும் என்று கருதுகின்றபோதும் பதினாறு சதவீதமானோர் மசூதி இடிக்கப்படல் வேண்டும் என்று விரும்புகின்றனர். நான்கு சதவீதத்தின மட்டும் இராமர் ஆலயம் தேவையில்லை எனக்கருதுகின்றனர். கரசேவை தொடரப்பட வேண்டும் என்று ஐம்பத்துஏழு சதவீதத்தினர் விரும்புகின்றபோதும், முப்பத்தேழு சதவீதத்தினர் தேவையற்றது எனக் கருதுகின்றனர்.

### இப்போதைய நிலை

இராமர் ஆலயம் கட்டுவதில் ஈடுபட்டிருக்கும் சாதுக்கள் பாரதீய ஜனதாவின் நிர்ப்பந்தம் எதுவுமின்றிப் பிரதமரை முதன்முறையாகச் சந்தித்துப் பேசியபோது பெறப்பட்ட கால அவகாசம் மேலும் நீடிக்கப்பட வேண்டும் என்பதும், பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடொன்றை எட்ட வேண்டும் என்பதும், பாரதீய ஜனதா மற்றும் உத்தரப் பிரதேசம்என்பவற்றின் நிலைப்பாடாக இருக்கின்றது எனலாம். தன்னைச் சந்தித்த சாதுக்களிடம் ''அயோத்தியில் கோவில் கட்டுவதில் உங்களைப் போலவே எனக்கும் அக்கறை இருக்கிறது'' என்று நரசிம்மராவ் கூறியதன் மூலம் அவர் நேர்மையாக முயற்சிகளை மேற்கொள்வார் என்றே அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் எனலாம்.

மேலும் முந்தைய வருடங்கள் போல இராமர் ஆலயம் அமைக்கும் பிரச்சினை ஆவேசத்தைத் தூண்டும் ஒன்றாக இப்போது இல்லை. இது ஒரு அகில இந்திய நிகழ்ச்சியாகவும் இப்போது இருப்பதில்லை. கர சேவைக்கென முன்வருபவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் உத்தரப் பிரதேசத்தின் பத்துப் பன்னிரண்டு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகத்தான் உள்ளனர். கர சேவைக்கென 50,000க்கும் அதிகமானோர் அயோத்திக்கு வந்திருந்தனர் என்று விஸ்வ இந்து பரிஷதத் சொல்லிக்கொண்டது உண்மையல்ல என்றும், 8,000க்கும் குறைவானவர்களே முன்வந்தனர் எனவும் புலனாய்வு அறிக்கை தெரிவித்திருந்தன.

ஆக அயோத்தி விவகாரத்தில் தற்காலிகமாக உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் தவிர்க்கப்பட்டு, நரசிம்மராவ் கால அவகாசம்பெற்று விட்டிருந்தார் என்பது உண்மையே. எனினும் இக்கால அவகாசம் நீடிக்குமா என்பதும், அயோத்தி விவகாரத்திற்கு ராவ் முற்றுப்புள்ளி வைப்பாரா என்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயங்களே,

- இளையவன்

கைபற்றியதத்துவம் அவரின் நடவடிக்கைகள் போல் தவறானதல்ல. ஆனால் இத்தத்துவம் அவருடையதும் அல்ல. ஒருவன் பிறக்கும் போது நிச்சயமாக தெரிவது அவன் என்றோ ஒரு நாள் இறக்கப் போகிறான் என்பதே ஆகும். இந்த உண்மையையே ராம்தாஸ் இலங்கைத்தமிழ் அகதிகளைப் பார்த்துக் கூறியுள்ளார். அத்தோடு, சாவிற்குப்பயந்து எவ்வளவு தூரம் ஓடினும் சாவில் இருந்து தப்பமுடியாது! அத்தோடு இன்று உலகின் எந்த முனையிலும் சண்டையற்ற சமாதான வலயம் ஒன்றை காணமுடியாது. எங்கும் எவ்வேளையிலும் மோதல்கள் வெடிக்கலாம் இந் நிலையில் வாழ்க்கை என்பது நிச்சயமற்றது; மரணம் என்பது எவ்வேளையிலும் வரக்கூடும்

இந் நிலையில் மரணத்தை எவ்வாறு எங்கே எதிர்கொள்வது என்பது தான் பிரச்சினை ஆகும். இதில், தமது மக்களுக்காகவும் அவர்களின் சுதந்திரமான வாழ்க்கைக்காவும் போராடி மடிவதா, அன்றி அந்நிய மண்ணில் அகதிகளாக அடிமைப்பட்டு வாழ்ந்து மடிவதா என்பதே இன்று இலங்கைத் தமிழ் மக்கள் முன்னுள்ள பிரச்சினையாகவுள்ளது.

இதில் தனது இனத்தின் விடுதலைக்காகப் போராடி மரணமடையின் தனது மக்களினால் போற்றப்படுகின்றான், நினைவில் நிறுத்தப்படுகின்றான். அவனது மரணம் அவனுக்கும் அவனது இனத்திற்கும் பெருமை சேர்ப்பவையாக இருக்கின்றது மரணம் அவனது உடலை அழித்தாலும் அவனது புகழ் உயிர்வாழும். அவன் மரணம் அவனினத்திற்கு விடிவைத் தேடித்தரும் ஆனால் அந்நியமண்ணில் அடிமையாக வாழ்ந்து மரணமடைந்த எவரின் பெயரையும் வரலாறு கூறாது அத்தோடு அவன் வாழ்க்கை அவனது சமூகத்திற்கோ அன்றி இனத்திற்கோ நன்மைபயக்க கூடியதாக இருக்கப் போவதில்லை. அவனது மரணம் குறித்து எவரும் கவலைப்படப் போவதுமில்லை அது எங்கே தொலைவில் நடக்கும் ஒரு அடிமையின் இறப்பாகவே முடியும்.

இந்நிலையில்தான் திரு. ராம்தாஸின் போதனை ஏற்புடையதாகவுள்ளது. ஆனால் ராம்தாஸின் இப் போதனையானது தனியாக தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மட்டும் பொருத்தப்பாடானதல்ல இன்று உலகம் பூராவும் பரந்துள்ள சகல இலங்கைத் தமிழருக்கும் பொருத்தப்பாடானதே.

ஆனால் ராம்லாலா சிலை இப்போதிருக்கிற இடத்தில் தானிருக்கும் என்கிறார்.

கடந்த அக்டோபரில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் கல்யாண்சிங் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு கையகப்படுத்தி நிலத்தில் இந்த அத்திபார மேடை தற்போது கட்டப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்திய நிலத்தில் சுற்று மதில் ஒன்றும் எழுப்பியுள்ளது இவை யாவும் இது அக்டோபர் 25, 1991ல் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் நிரந்தர கட்டடம் எதையும் கட்டக்கூடாது என்றும் நில உரிமையை யாருக்கும் மாற்றக்கூடாது என்றும் மாநில நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு முரணானது என்று குறிப்பிடப்படுகின்றது. மாநில நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு மாநில அரசு மேன்முறையீடு செய்ததன் அடிப்படையில் நவம்பர் 15, 1991ல் கையகப்படுத்தப்பட்ட போது இருக்கும் நிலையேதொடர்ந்து பேண வேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் ஆணையிட்டிருந்தது. எனினும் இடிக்கும் வேலை தொடரப்பட்டதாகக் கூறி ஏப்பிரல் 10, 1992ல் உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண்சிங் மற்றும்விஷ்வ இந்து பரிஷத் பொதுச் செயலாளர் அசோக்சிங்ஹல் ஆகியோருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்கள் அனுபபியது.

ஆனாலும் கரசேவைப்பணிகள் தொடர்ந்தன. ''மத்திய ரிசேவ் பொலிஸ்படை வந்து கொண்டிருக்கின்றது. விடிவதற்கு இடையில் அது நடவடிக்கையில் இறங்கும். ரத்தக் களறி நடக்கும்'' என்று செய்தி பரவ ''தற்கொலைப் படை அந்த இடத்திற்குச் சென்று கரசேவை செய்து தோட்டாக்களை தமது நெஞ்சில் தாங்கிக் கொள்ளும்'' என்று விஷ்வ இந்து பரிஷத் அமைப்பின் சிலர் முழங்கிய போதும் அது வெறும் புஷ்

அசிங்கமான அரசியல் ஆதாயத்திற்காக ஒருபிரச்சினையை எப்படி வலுக்கட்டாயமாகக் கையாளுகின்றார்கள் என்பதற்கு பாரதீய ஜனதா அயோத்தி இராமர் ஆலயப் பிரச்சினை ஒரு நல்ல உதாரணமாகும். அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களில் பாரதீய ஜனதாக் கட்சி அயோத்திப் பிரச்சினையைப் பயன்படுத்தியது. இதன் மூலம் 1989 இல் பதிவான மொத்த ஓட்டுகளில் 11.4 சதவீதமும், 82 லோக்சபா தொகுதிகளும் பாரதீய ஜனதாவிற்குக் கிடைத்தன. அதேபோல23.4சதவீதஓட்டுக்களும்119லோக்சபாத்தொகுதிகளும் 1991 இல் பா ஜ கட்சி பெற்றுக் கொண்டது. அடுத்த தேர்தலுக்கு இன்னமும் நாள் குறிக்கப்படாத போதும் பாரதீய ஜனதா இராமர் ஆலயப் பிரச்சினையை தூண்டுவது ஏன்? என்ற கேள்வி இங்கு எழலாம்.

கட்சித் தலைமைக்குள் இருக்கும் நெருக்கடியைத் திசை திருப்புவதே இப்போது இராமர் ஆலயப் பின்னணியில் இருக்கின்றது. தற்போது கட்சித் தலைமையை கைப்பற்றியிருக்கும் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி தனது ஆளுமையைக் கட்டி வளர்ப்பதற்காக விஷ்வ இந்து பரிஷத்திற்கும் கட்சிக்கும் இடையே வித்தியாசம் தெரியாமல் செய்தார். ''ஏத்தா யாத்திரா'' கேலிக்குரியதாசு முடிந்து போய் விட்டதில் கட்சிக்குள் இருக்கும்மிதவாதிகளை குற்றவாளிகளாகக் காணும் ஜோஷி அந்த அவமானத்தைத்துடைத்து, டிசம்பரில் மீண்டும் கட்சித் தலைமையைக் விஷ்வஇந்துபரிஷத்தைப் பயன் டுத்துகின்றார். இதனாலேதான் அயோத்திக்குச் செல்ல வேண்டாம் என்று அத்வானியும், வாஜ்பாயும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கேட்டுக்கொண்ட வேளையில், கொந்தளிப்பான சூழலில் அங்குசென்ற ஜோஷி

# அயோத்தியா விவகாரத்தில் காங்கிரஸ்-பாரதீய ஜனதா கூட்டு

## - ஜனதா தள் குற்றச்சாட்டு

(டில்லி)

அயோத்தியா விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதாக் கட்சியும் கைகோர்த்துச் செயற்படுவதாக ஜனதாதள் கட்சித் தலைவர்கள் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சரத்யாதவ் தலைமையிலான மண்டல் யாத்திரை நிறைவு பெற்றதை ஒட்டி புதுடில்லியில் நடைபெற்ற பேரணி ஒன்றின் இறுதியில் பேசிய கட்சியின் முக்கிய தலைவர்கள் இக்குற்றச்சாட்டினை வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் அயோத்தி விவகாரத்தில் பாபர் மசூதி வளாகத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை அடுத்தஆண்டு ஜனவரி 26-ம் திகதிக்கு முன்பாக மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முற்றிலும் செயற்படுத்த வேண்மெனவும் இது விடயத்தில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை விரைவில் பெறுவதற்கும் மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அக்கூட்டத்தில் ஜனதா தள் கட்சி மத்திய அரசைக்கோரியுள்ளது.

# பாபர் மசூதி செயற்கமிட்டி பேச்சுக்களில் பங்கேற்கும்

(டில்லி)

அயோத்திவிவகாரம்தொடர்பான மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களிலும் பாபர் மசூதி செயற்கமிட்டியின் தூதுக்குழு கலந்து கொள்ளும் என்று அறிவித்துள்ளது

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாபர் மசூதி செயற் கமிட்டியின் பொதுச் செயலாளர் மேலும் கூறுகையில் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதில் கமிட்டி ஆர்வமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# அங்கோலா அரசுப்படைகள் முன்னேறி வருகின்றன

(லுவாண்டா)

அங்கோலாவில் அரசுப் படைகளுக்கும், யூனிட்டா படைகளுக்கும் இடையே நடைபெற்ற கடும் மோதல்களில் அரசுப் படைகள் யூனிட்டா கிளர்ச்சிப் படைகளை தோற்கடித்து வருவதாகவும், தலைநகர் லுவாண்டாவில் அரசுப்படைகள்தமது பூரண கட்டுப்பாட்டை நிலைநாட்டியிருப்பதால் நிலைமை வழமைக்கு திரும்பியிருப்பதாவும் கூறப்படுகின்றது. இந்தச் சண்டைகளின்போது 1200 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் இருக்கும் அங்கோலா இராஜதந்திரிகள் யூனிட்டா கிளர்ச்சிப் படைகளின் தலைவர் ஜோனஸ் சவிம்பிக்கும், அங்கோலா அரசாங்கத் தலைவர் ஜோஸ் எட்வார்ட்டோ டொஸ் சாண்டோவிற்கும் இடையே பேச்சுக்கள் நடப்பதாகக் கூறியுள்ளனர். எனினும் இப்பேச்சுக்கள் நடப்பது பற்றி உறுதியான விபரங்கள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.

# முழுப் பாதுகாப்பு வழங்கப்படும்

[டில்லி]

அயோத்தியில் அடுத்த மாதம் ஆறாம் திகதி கர சேவை [கார்சேவா] தொடங்கும்போது சர்ச்சைக்குரிய பகுதியில் முழுப்பாதுகாப்பும் அளிக்கப்படும் என்று உத்தரப் பிரதேச காவல்துறை ஆணையாளர் எஸ். வி. எம் திரிபாதி கூறியுள்ளார். வாரணாசியில் செய்தியாளர் கூட்டத்தில் பேசியஅவர்மேலும்கூறுகையில் உத்தரப் பிரதேச அரசின் நிர்ப்பந்தங்களுக்கு உட்படாமல் அரசியல் சாசனப்படியே மாநிலப் பொலிசார் நடந்து கொள்வார்கள் என்றும் மத்திய காவல் படையின் எட்டு அணிகளை மேலும் அனுப்பும்படி உத்தரப்பிரதேச அரசு மத்திய அரசைக் கோரியிருக்கிறது என்றும் தெரிவித்தார்

ஈழநாதம்

# புத்தரின் பெயரில் குடிவகை; மகாபோதி சங்கம் ஆட்சேபம்

''கௌதம புத்தா சாக்ய முனி'' என்ற பெயரில் புதிய ரக வைன் ஒன்று இந்தியாவில் தயாரிக்கப்பட்டு பம்பாய் நிறுவனமொன்றினால் ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிய வந்துள்ளது. 750 மில்லி லீற்றர் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் இந்த வகைப் பானங்களின் 12.5 சதவிகிதம் அற்ககோல் இருப்பதாகவும், அதன் லேபல்களில் கௌதம புத்தரின் படமும் பொறிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

இதுபற்றி மகாபோதி சங்கத்தின் சார்பில் சிறிலங்கா அமைச்சரவையின் முன்னாள் அமைச்சரும் சிங்கள ஆராய்ச்சிக பெரமுனவின் தலைவருமான காமினி ஜெயசூரியா கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரிடம் புகார் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளார்.

அக் கடிதத்தில் காமினி ஜெயசூரியா மேலும் கூறுகையில் கௌதம புத்தரின் படத்தையும் பெயரையும் இவ்வாறு பயன்படுத்துவது உலகம் முழுவதும் இருக்கும் பௌத்தமதச் சார்பானவர்களின் மனதைப் புண்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார். மகாபோதி சங்கத்தினருக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் எழுதியுள்ள பதில் கடிதத்தில் இவ் விவகாரம் இந்திய வெளிவிவகார அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருப்பதுடன் இந்தக் குறிப்பிட்ட லேபல் ஆட்சேப கரமானதும் மலிவான ரசனையின் பாற்பட்டதும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அனுரா-ராவ் சந்திப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் அனுரா பண்டாரநாக்கா இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவை அவரது இல்லத்தில் வைத்து கடந்த புதன் கிழமை சுமார் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையில் தற்போதைய அரசியல் நிலைபரம் வடக்கு கிழக்கு பிரச்சினை இலங்கைத் தமிழர் விவகாரம் முதலியன ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சோனியா காந்தியையும் டில்லியில் வைத்து அனுராபண்டாரநாயக்கா சந்தித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது,

# ஓமந்தை மகாவித்தியாலயம் கல்வித்தரம் வீழ்ச்சி

(வவுனியா)

கல்வித்தரம் வீழ்ச்சியடைந்த நிலையில் ஓமந்தை மகா வித்தியாலயம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. போதிய ஆசிரியர்கள் இல்லை தளபாடங்கள் உபகரணங்கள் போதிய அளவில் இங்கில்லை. இராணுவ நடவடிக்கைகளினால் பாடசாலைக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் இப்பாடசாலை மூடப்படவேண்டிய நிலை ஏற்படும்.

பல பட்டதாரிகளை உருவாக்கிய இந்தப் பாடசாலையின் கல்விநிலை என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஓமந்தை கொத்தணி அதிபர் திரு. சு. மர்மலானந்த குமாரை கேட்டபோது.

கல்வி அதிகாரிகளினால் இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத அனைத்துப் பாடசாலைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கு கிடைக்கவேண்டிய பொருள்கள் உபகரணங்கள் யாவும் எடுத்து வருவதற்கு இராணுவம் அனுமதி வழங்குவதில்லை.

வாய்ப்புகள், வசதிகள், சலுகைகளைப் பெறும் நோக்குடன் இப்பிரதேசத்தில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களோ நகரப்பகுதி பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர் என்றார்.

சமீபத்தில் யூ. என். எச். சி. ஆர். அமைப்பினால் எமது பாடசாலைகளுக்கு என வழங்கப்பட்ட பொருள்களை எடுத்துவருவதற்கே இராணுவம் தடைசெய்துள்ளது. கல்வித்திணைக்களத்திலிருந்து கொண்டுவரப்பட்ட எழுதும் தாள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டது.

மாணவர்களுக்குரிய பரீட்சைகள், அறிவுப் போட்டிகள் ஆகியவற்றை ஒழுங்காக நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஓமந்தை கொத்தணிப் பிரிவில் 23 பாடசாலைகள் உள்ளன. ஆங்கில ஆசிரியர்கள் இப்பாடசாலைகளில் எவருமே இல்லை.

சேதமடைந்த கட்டடங்களை புனரமைக்க முடியாத சூழ்நிலை நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

க. பொ. த. உயர்தரம் வரை உள்ள இப்பாடசாலையில் தற்போது மிகக்குறைவான மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர்.

முப்பத்தைந்து பட்டதாரி ஆசிரியர்களை இப்பாடசாலை உருவாக்கியுள்ளது. ஆனால் இப்போது இந்த பட்டதாரி ஆசிரியர்களில் எவரும் இப்பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்கு முன்வரவில்லை பல ஆசிரியர்கள் தமது சுகவாழ்வையே சிந்திக்கிறார்கள். மாணவர்களின் கல்வி நிலை பற்றி எவரும் யோசிப்பதில்லை இதுவே கல்விநிலை வீழ்ச்சிக்குக் காரணம் என்றார். (தி)

## கொப்பேகடுவ நினைவாக நம்பிக்கை நிதியம்

(கொழும்பு)

அராலித்துறை கண்ணிவெடியில் சிக்குண்டு இறந்த லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவாவின் 3 ஆம் மாதம் பூர்த்தியானதையொட்டி அவரது நினைவாக அவரது மனைவி திருமதி லாலி கொப்பேகடுவ நம்பிக்கை நிதியம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

இந் நிதியத்தினூடாக வடகிழக்கில் உயிரிழந்த படையினரின் குடும்பங்களுக்கும் அங்கவீனமுற்ற படையினருக்கும் இந் நிதியம் உதவி வழங்கும். பாதிக்கப்பட்ட கிராமங்கள் புனரமைப்புச் செய்வதற்கும் இந் நிதியம் உதவ் வழங்கும்.

கொப்பேகடுவாவின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்த நண்பர்கள் உறவினர்கள் இந் நிதியத்தை தொடங்கினராம்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஏகாம்பரநாதன் ஈஸ்வரிஅம்மா

தும்பளை மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி. ஏகாம்பரநாதன் ஈஸ்வரி அம்மா 7-11-92 சனிக் கிழமை சிவபதமடைந்தார்.

இவர் பிரபல வர்த்தகர் திரு. ப. சு. ஏகாம்பரநாதன் அவர்களின் அன்பு மனைவியும் திரு ஏ. கணேசா [பொறியியலாளர் சாம்பியா] திருமதி க. கமலகுமாரி, ஏ. சிவானந்தா, ஏ. அருட்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சி. சச்சிதானந்தன் [தபாலதிபர்], சி. வல்லிபுரம் [பிரதம லிகிதர்], சி முருகேசபிள்ளை [உதவி அரசாங்க அதிபர், பருத்தித்துறை]. ஆகியோரின் அன்புச் சகோதரியும், வ. நாகலிங்கம் [ஆசிரியர்] அவர்களின் மருமகளும், திரு. இ கணேசராசா, திருமதி க. தயாநந்தி. சி. மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமியும், நிசாந்தி, சுதர்சினி, அனுரா, பால கணேஷ், கார்த்திகா, ஜனனி, ஜனகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார். அன்னாரின் தகனக்கிரியை பருத்தித்துறை இந்துமயானத்தில் 08-11-92 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
புலோலி மேற்கு,
தும்பளை,
பருத்தித்துறை.
ஏ. சிவானந்தா [மகன்]

[3606]

### கெங்காதரம் நாகம்மா

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், கந்தப்ப சேகரம் வீதி. (ஹரன் தியேட்டர் ஒழுங்கை) யாழ்ப்பாணத்தில் வசித்தவருமா

## விண்ணப்பப்படிவம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமசேவையாளர் அலுவலகங்களில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பிப்பதற்கான படிவங்களும், பழுதடைந்த அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிதாக விண்ணப்பிக்கும் படிவங்களும் கிராம சேவையாளர் அலுவலகங்களில் முடிவடைந்து விட்டன.

அத்துடன் யாழ். செயலகத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்திலும் முடிவடைந்து விட்டதாக அறியப்படுகிறது. (42)

## பௌர்ணமி தீப அரங்கு

(நமது நிருபர்)

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் பௌர்ணமி தீப அரங்கில் இன்று திருமதி சரோஜினி சிவகுருநாதன், செல்வி பிரசாந்தி இராமசசந்திரன் ஆகியோரின் இன்னிசை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## கட்டுகஸ் தோட்ட பகுதியில் பல தமிழர் கைது

(கொழும்பு)

குவைத் நாட்டிலிருந்தும், கனடாவில் இருந்தும் தனித் தனியே வந்த இரு தமிழ் இளைஞர்கள் கட்டுகஸ்தோட்டவில் விருந்தினர் வீடொன்றில் தங்கியிருந்த போது பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று சந்தேகம் தெரிவித்துள்ள பொலிசார் வீட்டைச் சோதனையிட்டபோது லண்டனில் வாழும் தமிழர் ஒருவரால் கனடாவிலிருந்து திரும்பிய இளைஞனுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்கும்படி வீட்டுக்கார பெண்மணிக்கு எழுதப்பட்ட கடிதமொன்றையும் கைப்பற்றினர்.

இதேவேளை கட்டுகஸ் தோட்ட பகுதியில் சிங்களவர்களின் வீடுகளை வாடகைக்குப் பெற்று அங்கு தங்கியிருக்கும் பெரும்பாலான தமிழர்கள் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களில் பெரும்பாலானோர் மாதகல், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிசார்கூறியுள்ளதோடு மேலும் புலன் விசாரணைகள் தொடர்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

## குழாய்க் கிணறு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒருகுழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஒன்றை சர்வோதயம் ஆரம்பித்துள்ளது.

## விண்ணப்பப் படிவங்கள் கப்பலில் வரும்

(யாழ்ப்பாணம்)

தபால் அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் அண்மையில் வரும் கப்பலில் எடுத்துவரப்படவுள்ளன-

இப்படிவங்கள் வந்து சேர்ந்ததும் தபால் அட்டைகள் விநியோகம் துரிதமாக நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டைகளை,

## பாராளுமன்றத்தில் சொகுசுக்கார்கள்

# கடன் தொகையை அறிய வெளிநாட்டு தூதர் வருகை

பிரதமரும், நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்கா பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை வெளியிட்ட சமயம் பத்துக்கும் அதிகமான விலையுயர்ந்த சொகுசுக் கார்கள் பாராளுமன்றக் கட்டடத்தின் பிரமுகர் நுழைவாயிலின்முன் நிறுத்தப்பட்டிருந்தன. கார்களிலி

கடந்த வெள்ளியன்று பிற்பகல் பிரதமர் சமர்ப்பித்துப் பேசிய சமயம் பாரளுமன்றத்தைச் சுற்றிப் பாதுகாப்புப் பலமாக இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது

## சிறிலங்கா அமைச்சர்

கட்சியில் இணைந்து இப்பதவிகளை பொறுப்பேற்றுக் கொள்

## 'குற்றப்பத்திரிகை'

# ராஜீவ்கொலை தொடர்பாய் திரைப்படம் தயாராகிறது

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையை அடிப்படையாக வைத்து 'குற்றப்பத்திரிகை' என்னும்தமிழ்த் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதனை ஆர்.கே.செல்வமணி என்பவர் இயக்கி வருகிறார்.

இப்படத்தில் இக்கொலையில் விடுதலைப் புலிகளுக்கோ அல்லது இலங்கை தமிழ்க் குழுக்களுக்கோ தொடர்பு உள்ளதாக காண்பிக்க போவதில்லை எனவும், நேரடியாக கொலையில் ஈடுபட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய காட்சிகளே காண்பிக்கப்படவுள்ளதாகவும் இதன் இயக்குநர் தெரிவித்தார்.

தியோட்டர் ஒழுங்கை) யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய கெங்காதரம் நாகம்மா அவர்கள் 8-11-92 இல் காலமானார். இவர் கெங்காதரத்தின் அன்பு மனைவியும், அமிர்தகௌரி (கவி), ராஜன், சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயகுமாரி, பவானி ஆகியோரின் மாமியாரும், சஜந்தனின் பேர்த்தியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (9-11-92) நண்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சசி

[3613]

---

# சூரியன் வேலுப்பிள்ளை

காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையை தற்போது வதிவிடமாகக் கொண்டவருமான சூரியன் வேலுப்பிள்ளை நேற்று (08-11-92) ஞாயிறு அன்று காலமானார். இவர் பூமணியின் அன்புக் கணவரும், ஞானமலர், காலஞ்சென்ற சிவமலர், சிவசுந்தரராஜா (ராஜா றைக்கிளினேர்ஸ், சுழிபுரம்). சிவகுருநாதன் (கிட்டி) இ.போ.ச. சாரதி காரைநகர் சாலை), சிவானந்தநாதன், நவமலர், குலானந்தராசா (குலம்), அரியமலர், சிவகுலகருணா (பரிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. துரைராசா, இ. பாலசுப்பிரமணியம், மா. பாலசுப்பிரமணியம் (சுப்பு) ப.நோ.கூ. சங்கம், காரைநகர்), ச. ரவீந்திரராசா, தங்கமலர், ஸ்ரீதலராணி, விஜயராணி, ரதிமலர் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (09 - 11 - 92) இன்று முற்பகல் 11.00 மணியளவில் சுதுமலையிலிருந்து கரையாம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் கவலையைத் தெரிவிக்கின்றனர்.

சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மகன் சிவசுந்தரராஜா
(சுந்தரம்)

[3612]

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

அடையாள அட்டைகளை, மேலதிக ஊழியர்களை நியமித்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வடமாகாண பிரதித் தபால் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

## கசிப்பு அருந்தி பலர் மரணம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடி வேம்பு பிரதேசத்தில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோரின் தொகை அதிகரித்து வருவதாகவும் கசிப்புஅருந்திய பலர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆலையடி வேம்புப் பிரதேசத்தினை அடுத்து திருக்கோவில் பிரதேசத்திலும் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாதாந்தக் கூட்டம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு தமிழீழக் கல்விக் கழகப் பணிமனையில் நடைபெறுமென தமிழீழக்கல்வி மேம்பாட்டுப்பேரவையின் செயலாளர்தெரிவித்துள்ளார்

---

### யுத்தத்தை

எனவே இதற்கு அரசியல் தீர்வு காண்பதே முக்கியமானதாகும்.

இன்று யுத்தத்தினால் பெரும் பாலானோர் அகதிகளாகியுள்ளதனால் அகதிகளுக்கும் யுத்தத்திற்கு பெருமளவும் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே யுத்தத்தினால் இன்றைய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது அரசியல் தீர்வு தான் முக்கியம் இதுபற்றி எல்லோரும் பேசுகின்றோம் ஆனால் அரசியல் தீர்வைக் கண்டு பிடிக்கத்தான் எவராலும் முடியவில்லை. எனத் தெரிவித்தார்.

பட்டிருந்தன. கார்களிலிருந்த வண்ணக் கொடிகள் காற்றில் பறந்தன.

சிறிலங்கா அரசு எவ்வளவு கடன் கேட்கப்போகிறது என்று அறிந்து கொள்வதற்காக வெளிநாட்டுத் தூதுவர்கள் வந்துள்ளார்கள் போலும் என்று வெளிநாட்டுத் தூதுவர்களின் இந்தக் கார்களைக் கண்ட ஒரு ஊழியர் கிண்டலாகக் கூறியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வரவு - செலவுத் திட்ட அறிக்கையை

---

### அரசுக்கு

ற்கு அண்மையில் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இவ் வைப்புக்களுக்கு வட்டி வழங்க முடியாத நிலையில் வங்கிகள் உள்ளமையே ஆகும்.

தற்போது இவ் வங்கிகளின் வருமானம் பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. இவற்றைக் காரணம்காட்டி அரசு சம்பள உயர்வை வழங்காது காலம் கடத்தி வருவதாக அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

---

### குவேக்கேர்ஸ்

னர்.

யாழ்ப்பாணம் வந்துள்ள மூவரடங்கிய சமாதானத் தூதுக் குழுவில் என். இராமமூர்த்தி, பொப் நிட்காட், மீசெல்வ் ஆகிய மூவர் உள்ளனர்.

இக் குழுவினர் இன்று இரண்டாவது தடவையாக விடுதலைப்புலிகள் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### தீர்வு

செல்ல வேண்டும் அதை விடுத்து எந்த ஒரு முடிவையும் அரசிடமிருந்து பெறாது அங்கு செல்வதால் எதுவித பலனும் கிடைக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் (ச,நி)

களை பொறுப்பேற்றுக் கொள்வார்எனஎதிர்பார்க்கபடுகிறது

தற்போதய பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா சிறிலங்கா தூதுவராக வெளிநாடொன்றிற்கு செல்லக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து லலித், காமினி, பிரேமச்சந்திரா போன்றோர் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து முக்கிய பேச்சாளராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா ரொனிடி மெல்லின் வருகையால் மனத்தாங்கலுக்கு உள்ளாகியுள்ளார் எனவும், இதனால் சிலவேளை இவருக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐவன் தெரிவித்தார்.

இதேசமயம் தற்பொழுது ஐ. தே. கவில் முன்னணிப் பேச்சாளர்கள் இல்லாமைகாரணமாகவே ஐ. தே. க. ஓஸி அபயகுணசேகராவை பயன்படுத்துவதாகவும் எனவே ரொனடி மெல் வருகை இந்த குறைபாட்டை நீக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

---

### சிறிலங்கா

களை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்லுமே அன்றி இது ஒரு தீர்வாகாது

இவ் வங்குரோத்து நிலையிலிருந்து வங்கிகளை மீட்க அரசு விரும்பின் பாதுகாப்புக்கென ஒதுக்கியுள்ள நிதி முழுவதையும் வங்கிகளுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு அரசு செய்தால் மட்டுமே மக்களிடையே நிலவும் வங்கிகள் பற்றிய தப்பான கருத்துக்களைக் களைந்து நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் எனவும் அது மேலும் தெரிவித்தது.

---

### ஆயுத

பிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து சிறிலங்காவிற்கான ஆயுத விநியோகத்தை பிரிட்டன் தடைசெய்திருந்தமை தெரிந்ததே.

### கிழக்கில்

விக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புலிகளை முற்றாக வெளியேற்ற எடுக்கப்படும் முதலாவது நடவடிக்கை இதுவாகும் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆனால் இந்த தாக்குதல் நடவடிக்கையை எதிர்க்கக் கூடிய பலம் புலிகளுக்கு உள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது

கடந்த ஆறு மாத காலங்களில் இப்பகுதியில் புலிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு, சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியில் படையினர் மீது பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதனை நீக்க வேண்டிய அவசியம் சிறிலங்கா இராணுவத்தினருக்கு அவசியமானதாகவுள்ளது.

மேலும் முஸ்லிம்களை திருப்திப்படுத்தவேண்டிய கட்டாயமும் இராணுவத்தினருக்கு உண்டு. இதனாலேயே இப்பாரிய நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், செங்கலடி, மண்முனை வடக்கு மண்முனை தெற்கு, மண்முனை வடமேற்கு. போரைதீவுப்பற்று வெல்லவெளி, வவுணதீவு, பட்டிப்பளை ஆகிய பகுதிகளில் ஊரடங்குதொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் ஏனைய பகுதியில் நேற்றிரவு 11.30 க்கு ஊரடங்கு நீக்கப்பட்டுள்ளது எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### முடிவடையும்

றால் பாதுகாப்புக்கு ஏன் இந்தத் தொகை பணத்தை ஒதுக்கியுள்ளார்என்பது புதிராகவே உள்ளது என்றும் பி. பி. ஸி. கேள்வி எழுப்பியுள்ளது,

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 08-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6544

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
26-9158, 27-9779, 43-1019, 26-382, 41-8292, 41-1227, 43-517, 41-6893, 26-3632, 40-1072, 28-3233, 22-5857, 26-3321, 26-9658, 26-375, 24-4207, 28-4672, 24-4560, 26-4882, 26-2585, 40-630, 24-4908, 27-4162, 28-248, 24-4390.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-
26-8674, 26-6398, 27-7653, 41-9663, 41-5603, 24-4875, 24-8529, 24-3262, 24-9549, 28-6624, 22-6882, 24-9744, 26-9201, 42-3726, 27-9771, 26-5563, 26-6335, 26-2764, 28-1677, 26-6796, 40-1188.